**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.145/2022 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.7 |
| பெயர் | கனகராஜ் | கிராமம் | |
| தந்தை பெயர் | அழகுசேர்வை | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Krishnan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 26.05.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் அம்மையாபட்டியில் குடியிருந்து வருகிறேன். 27.06.2022 தேதியில் மாலை சுமார் 6.30 மணியளவில் இந்திராணி, மற்றும் பிரவீன் ஆகியோர் மீது லாரி மோதியதில் அவர்களுக்கு காயம் எற்பட்டு இந்திராணி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அவருடைய பிரேதத்தின் மீது நகர காவல் நிலைய போலிசார் பிரேத விசாரணை மேற்கொண்டனர். அந்த சமயத்தில் நான், பாண்டியன் மற்றும் சில நபர்கள் முன்னிலையில் போலிசார் பிரேத விசாரணை மேற்கொண்டனர். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோன இந்திராணி எனது உடன்பிறந்த தம்பி மனைவி ஆவார். விபத்து குறித்து கேள்விபட்டுதான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். அந்த சங்கதியை என்னுடைய போலிஸ் விசாரணையின்போது கூறியுள்ளேன். இறந்துபோன இந்திராணி எனது உறவினர் என்பதால் என்

முன்னிலையில் பிரேத விசாரணை நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/—கனகராஜ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/— திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.